www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSS

# இரண்டாம் பருவம்–தொகுத்தறித் தேர்வு – 2024

7 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :– 6×1=6

1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது _______________
   அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்
2. "ஏறப்பரியாகும் " என்னும்தொடரில் "பரி" என்பதன்பொருள்__________
   அ) யானை ஆ) குதிரை இ) மான் ஈ) மாடு
3. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம்_________ இருக்கக் கூடாது.
   அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்
4. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர்___________
   அ) எழுத்து ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி
5. ' கேடில்லை ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) கேடு + இல்லை ஆ) கேடி + இல்லை
   இ) கே + இல்லை ஈ) கேள்வி + இல்லை
6. எழுத்து + அணி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்தோணி ஈ) எழுதாணி

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :– 4×1=4

7. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ______________
8. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ____________.
9. நன்னூலின் படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை ___________ ஆகும்.
10. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ____________ .

இ. பொருத்துக :– 4×1=4

11. கற்கும் முறை – காகம்
12. உயிர்க்குக் கண்கள் – பிழையில்லாமல் கற்றல்
13. விழுச்செல்வம் – எண்ணும்எழுத்தும்
14. கரவாகரைந்துண்ணும் – கல்வி

ஈ. ஏவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. 6×2=12

15. மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது எது?
16. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?
17. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருட்கள் யாவை?
18. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
19. மனிதப்பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
20. ஓவியங்களின் வகைகள் யாவை?
21. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
22. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2×3=6

23. சிறிய நீர் நிலைகளையும் கடல்களையும் கடக்க, தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.

24. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

25. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

26. கேலிச்சித்திரம் என்றால் என்ன?

ஊ) அடிமாறாமல் எழுதுக. 2+4=6

27. 'எண்ணித் ' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

28. அ )' கட்டிஅடிக்கையால் ' எனத்தொடங்கும் ' கீரைப்பாத்தியும் குதிரையும் ' பாடலை அடிமாறாமல் எழுதுக. ( அல்லது )

ஆ) " வானம்ஊன்றிய " எனத் தொடங்கும் ' கலங்கரை விளக்கம் ' பாடலை அடிமாறாமல் எழுதுக

எ) கடிதம் எழுதுக. 1×5=5

29. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

ஏ) எவையேனும் ஒன்றனுக்கு விடையளி. 1×5=5

30. அ) பயணங்கள் பலவகை : முன்னுரை – பயணத்தின் தேவை – தரை வழிப்பயணம் – கடல்வழிப் பயணம் – வான்வழிப் பயணம் – முடிவுரை *( அல்லது )*

ஆ) படம் உணர்த்தும் கருத்தை ஐந்து வரிகளில் எழுதுக.



ஐ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 6×2=12

31. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.

அ) அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

ஆ) ஆசிரியர் நாளை சிறு தேர்வு நடத்தினார்.

32. சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக. ( நீ, அவர்கள், உன் )

அ) ____________ வந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஆ) ____________ என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?

33. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக. அ) _____ பறக்கும் ஆ) _____ பேசும்

34. இடைச்சொல்' ஐ ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.

அ) வீடு கட்டினான் ஆ) புல் தின்றது

35. கலைச்சொல் தருக :- அ) MODREN ART ஆ) DISCIPLINE

36. பின்வரும் சொல்லை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக. : *படி*



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com